பக்கம்: எட்டு
விலை ரூபா 5.00

16 JAN 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
நிக்சன் பல்பொருள்
வாணிபம்
பஸ் நிலையம்
அச்சுவேலி
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 03 செவ்வாய்க்கிழமை (16-1-2001) தொ. பேசி 3378 ஒலி: 28

### நோர்வே தூதுவர் எரிக்சோல் ஹெய்ம்

## விடுதலைப்புலிகளின் செய்தியுடன் 20 ந் திகதி கொழும்பு வருகிறார்

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடுநிலை ஏற்பாட்டாளராக செயற்பட்டு வரும் நோர்வே யின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் எதிர்வரும் 20ம் திகதி சனிக்கிழமை மீண்டும் கொழும்பு வரவுள்ளார். நோர்வேத்தூதுவரின் கொழும்பு விஜயத்தை நோர்வேத் தூதரக வட்டாரங்கள் மறுப்பெதுவுமின்றி ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சோல்ஹெய்ம் கடந்த 11ந் திகதி ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் தமிழ்க் கட்சித் தலைவர்களையும் சந்தித்த பின்னர் உடனடியாக ல்ண்டன் சென்று விடு தலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார். இப்பேச்சுவார்த்தைகளை (8ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ் எழுச்சிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவனம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமையே என்பதை வெளிப்படுத்த, யாழ் பல் கலைக்கழக சமூகம் அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்னெடுத்துள்ள எழுச்சிப்போருக்கு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவ (8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் வணிகர் கழகமும் எழுச்சிக்கு ஆதரவு

[யாழ்ப்பாணம்]
யாழ்பல்கலைக்கழகசமூகம் முன்னெடுத்துள்ள பொங்கு தமிழ் எழுச்சிநிகழ்வுக்கு யாழ் வணிகர் கழகம் தமது முழு ஆதரவை வழங்குமென்று மேற்படி கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

தமிழ்மக்களுக்கு கௌரவத்துடன் கூடிய நிலையான (8 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு

# யாழ். பல்கலைக்கழக வளாகத்தை சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்பு!

## பல்கலை மாணவர்மீது தீவிர சோதனை

(யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு நிருபர்கள்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தினரால் நாளை நடாத்தப்பட உள்ள "பொங்கு தமிழ் எழுச்சி" நிகழ்வை ஒட்டி யாழ்ப்பாண பல்கலைக் கழக வளாகத்தைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக வளாகத்தின் எல்லைப்புறங்களில் இராணுவமும், பொலிசும் குவிக்கப்பட்டு பல்கலைக்கழக மாணவர்கள் பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்ட பின்னரே பல்கலைக்கழகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பல்கலைக்கழகத்திற்கு செல்லும் பிரதான வீதிகளில் இராணுவமும், பொலிஸாரும் பெருமளவில் நிறுத்தப்பட்டு சோதனைநடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கொக்குவில் பிறவுண் வீதி, பலாலி வீதி, இராமநாதன் வீதி, வளாக வீதி ஆகிய வீதிகளிலும்சந்திகளிலும், பொலிஸாரும் இராணுவத்தினரும் ட்ரக் வண்டிகளிலும் இராணுவ பஸ்வண்டிகளிலும் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். (8-ம் பக்கம் பார்க்க)

## கப்பலில்வந்தபயணிகளில் சிலர் தெல்லிப்பழையில்

(யாழ்ப்பாணம்)
திருமலையில் இருந்துசுமார் 1300 பயணிகளுடன் லங்கா முடித்த கப்பல் நேற்று நண்பகல் 1.30 மணியளவில் காங்கேசன் துறையை வந்தடைந்தது.

இக் கப்பலில் வன்னியில் இருந்து யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்வதற்காக சுமார் 117 பேர் வந்துள்ளதாகவும் அவர்கள் மீதான சோதனை நடவடிக்கைகள் முடிவதற்கு கால தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கப்பல் பயணிகளில் ஒரு பகுதியினர் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு நாளுக்கு 237 இலட்சம் ரூபா செலவானாலும் புலிகளை ஒழிப்போம்

[கொழும்பு]
தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் வெற்றி இலக்கை அடையும் வரை யுத்தம் தொடரும்என பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரம நாயக்கா சூளுரைத்துள்ளார்.

சிறந்தஉள்ளூராட்சிச் சபைகளுக்கான விருது வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய போதே பிரதமர் இவ்வாறு சூளுரைத்தார்.

பண்டார நாயக்கா மாநாட்டு மண்டபத்தில் நடந்த இவ்வைபவத்தில் பிரதமர் மேலும் பேசியதாவது, (8 ஆம் பக்கம் பார்க்க)

## இலண்டன் ரி.பி.சியும் பூரண ஆதரவு வழங்கும் விசேட ஒலிபரப்பு ஏற்பாடு

(லண்டன்)
தமிழ்மக்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமையே என்பதை வெளிப்படுத்த, யாழ். பல்கலைக்கழக சமூகமும்; யாழ்ப்பாண மக்களும் முன்னெடுத்துள்ள ''பொங்கு தமிழ்'' எழுச்சிப் போருக்கு ல்ண்டன் ரி.பி.சி வானொலி தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளதுள்ளது.

யாழ்ப்பாண சமூகம் தனது மனக்குமுறல்களை ஜனநாயக ரீதியில் வெளிப்படுத்த முனையும் வேளையில், அதற்கு தடையாக அரசாங்கம்செயற்படுவது குறித்து அவ் (8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பத்திரிகைச் செய்தி வாசிப்பதற்குத் தடை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடத்தடபட்டு வந்த நாள் மகிழ் அரங்கம் பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில்உள்ள செய்திகள் வாசிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமான அறிவித்தலொன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண செய்தியாளருக்கு தொலை பேசி மூலம் (8ஆம் பக்கம்பார்க்க)

## யார் தடுத்தாலும் 'பொங்கு தமிழ்' எழுச்சிப்போர் நடந்தே தீரும்!

### நேற்றுஅவசரமாககூடி மாணவர் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)
நாளை விடிந்தால்பொங்கு தமிழ் எழுச்சிப் போர் என்ற நிலையில்நேற்றுமாலையாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களும் அவசரமாகக் கூடி கள நிலவரம் குறித்து ஆராய்ந்தனர்.

பாதுகாப்புப்படையினர் பொங்கு தமிழ் எழுச்சியைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டாலும் எழுச்சிப் போரைத் திட்டமிட்டபடி நடத்தியே தீருவதென மாணவர்கள் ஏக (8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சூட்கேஸ், Cylnder, எனாமல், அலுமினிய, பித்தளை, சில்வர் பாத்திரங்கள். 6 மணி தொடக்கம் 1 மணிவரை பார்வையிடலாம். இல. 34/3 பரமேஸ்வராக்கல்லூரி, அயல் திருநெல்வேலி.

(2419)


## பரிசில் வழங்கல்

(ஈச்சமோட்டை)

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கத்தினரால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் திருவெம்பாவை மனனப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் அண்மையில் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்துடன்க பொ.த(உ/த) பரீட்சையில் 3 பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்ற சங்க உறுப்பினருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா சேமிப்பு வைப்பு புத்தகமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது (உ-59

பாடசாலைகள்

## அபிவிருத்தி

அம்பாறை மாவட்டத்தில் நாவதன் வெளி குடியேற்றக் கிராமத்திலுள்ள 13 பாடசாலைகள் ஜேர்மன் நாட்டு நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ எம் இஸ்ஸதீன் தெரிவித்தார்

(க 108)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் அரையாண்டுப் பரீட்சைகள் கல்வியாண்டு 2000-2001**

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவர்களிடமிருந்து 2001-01-27 திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை
2. இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை
3. மீள் பரீட்சை முதலாம் வருட அரையாண்டுப் பரீட்சை

உரிய விண்ணப்பப் படிவங்களை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளவும்.

மீள் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஒரு பாடத்திற்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தித் தாம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தில் சமர்ப்பிக்குமாறுகேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பதிவாளர்**

(கி-1332)


இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III

# பரீட்சையை மட்டக்களப்பிலும் நடத்தக் கோரிக்கை

## எம். பிக்கள் மட்டத்தில் முயற்சி

(ஏறாவூர்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு 3 பதவிக்கு ஆட்களை சேர்ப்பதற்கான தமிழ் மொழி மூல போட்டிப் பரீட்சை எதிர் வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பரீட்சைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி யாழ்ப்பாணம், வன்னி போன்ற இடங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் மட்டக்களப்பில் மேற்படி பரீட்சை நிலையம் அமைக்கப்படவில்லை என்றும் இப் பகுதிப் பரீட்சாத்திகள் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலும் மேற்படி பரீட்சையை நடத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டத்தில் முயற்சி மேற்கொள்ளப் படுவதாகவும் அறியப்படுகிறது. (க-108)

## சமாதான நீதவான் பதவிகள் இரத்து

குற்றச்சாட்டுக்கு ஆளாகிய அல்லது குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்ட சமாதான நீதவான்களின் பதவிகளை இரத்துச் செய்வதற்கு நீதியமைச்சு நடவடிக்கையெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்படி விடயம் தொடர்பாக நாடு முழுவதிலும் உள்ள சமாதான நீதவான்களின் விபரங்களை சேகரிக்கும் நடவடிக்கைகளில் நீதியமைச்சு ஈடுபட்டுள்ளதோடு அனைத்து விபரங்களையும் சமர்ப்பிக்குமாறும் சமாதான நீதவான்களுக்கு உத்தரவு இட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பட்டதாரி ஆசிரிய நூலகர் நேர் முகப்பரீட்சையை ஒத்திவைக்க கோரிக்கை

(ஏறாவூர்)

நூலக அபிவிருத்திக்கென தெரிவு செய்யப்பட்ட அரசாங்க பாடசாலைகளில் சேவையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிலிருந்து ஆசிரிய நூலகர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சையினை சில நாட்கள் காலந்தாழ்த்தி நடத்துமாறு பரீட்சார்த்திகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேர்முகப் பரீட்சை எதிர்வரு 20 ஆந்திகதி திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நடத்தப்படவுள்ளத க அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிருவாக சேவையில் தமிழ் மொழிமூல பட்ட தாரிகள் ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை இதே தினத்தில் கொழும்பில் நடைபெறவுள்ளதால் பரீட்சார்த்திகள் கலந்துகொள்ள முடியாதுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட நேர்முகப்பரீட்சை மற்றும் போட்டிப் பரீட்சையும் நடத்தப்படுவதனால் ஏராளமான பட்டதாரி ஆசிரியர்கள் இரு பரீட்சைகளுக்கும் விண்ணப்பம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

புத்தூர் மெ.மி.த.க பாடசாலையை

## மீண்டும் இயங்க வைக்கும் முயற்சிகள் துரிதகதியில்

(அச்சுவேலி)

கடந்த பல ஆண்டுகளாக சேதமடைந்த நிலையில் செயற்படாதிருந்த புத்தூர் மெதடிஸ்தமிஷன் தமிழ்கலவன் பாடசாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து கடுமையான சேதங்களிற்கு உள்ளான நிலையில் இப்பாடசாலைகாணப்பட்டடையினாலும் மிகவும் அருகாக இராணுவ சோதனை நிலையம் அமைக்கப்ப[illegible] யினாலும் பாடசாலை இயங்க முடியாத நிலை காணப்பட்டு வந்தது

தற்போது பாடசாலையை மீள இயககுவதற்கு ஏதுவாக படை நிலை அப்பால் நகர்த்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து பாடசாலை வளவில் மண்டிக்கிடந்த பற்றைகள் வெட்டித் துப்பரவாக்கப்பட்டு கட்டடம்பழுது பார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேசமயம், மேற்படி பாடசாலை புத்தூர் சோமாஸ்கந்த பாடசாலையில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (உ-14)

## கிராம அலுவலரின் சாதுரிய நடவடிக்கையால் திருட்டுக்கும்பல் அம்பலம்

(ஆவரங்கால்)

கிராம அலுவரின் முயற்சியின் பேரில் பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடைய கள்வர் குழு ஒன்று வகையாக மாட்டிக் கொண்டதுடன், பொலிஸாரிடமும் அவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது விடயம் தொடர்பாக அறிய முடிந்ததாவது,

கடந்த வெள்ளியன்று அச்சுவேலி பஸ் நிலையப்பகுதியில் அமைந்துள்ள தனியார் வர்த்தக நிலையம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டி ஒன்று காணாமற் போனது.

இது தொடர்பாக துவிச்சக்கர வண்டியை பறிகொடுத்தவர் புத்தூர் வடக்கு கிராம அலுவலர் கே.இராஜதுரையிடம் சென்றுமுறையிட்டார்.

சில சந்தேகங்களின் அடிப்படையில உண்மையில் சைக்கிள் திருடிய நபரை இனம் கண்டு கொண்ட கிராம அலுவலர் உரிய முறைப்படி துவிச்சக்கர வண்டியை மீட்டுக் கொடுத்தார்

அத்துடன், துவிச்சக்கர வண்டியை களவெடுத்த நபரிடம் சாதுரியமாக பேச்சுக் கொடுத்து பல்வேறு திருட்டுக்கள் தொடர்பான தகவல்களையும், தொடர்புடைய பலரையும் இனம் கண்டறிந்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் திருட்டுப் போன பல்வேறு பெறுமதிவாய்ந்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளது.

ஆவரங்கால் மேற்குப்பகுதியில் இருந்து இயங்கி வந்த திருடர் குழுவே பொலிஸார் வசம் ஒப்படைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது (உ-57).

## பயண அனுமதி வழங்கப் பட்டோர் விபரம்

இம்மாதம் 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக நீதியாகத்தரப்படுகின்றன.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 158461 ஏ | 158461 பி |
| 160084 ஏ | 160084 பி |
| 162029 ஏ | 162029 பி |
| 162029 சி | 163961 ஏ |
| 163961 பி | 163961 சி |
| 167303 ஏ | 169861 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 146222 ஏ | 148399 ஏ |
| 148397 பி | 150953 ஏ |
| 150953 பி | 150953 சி |
| 150953 டி | 151194 ஏ |
| 151480 ஏ | 151480 பி |
| 151480 சி | 151480 டி |
| 153911 ஏ | 153911 பி |
| 154770 ஏ | 155770 பி |
| 154770 சி | 155057 ஏ |
| 155775 ஏ | 155775 பி |
| 155775 சி | 155775 டி |
| 155859 ஏ | 155877 ஏ |
| 155877 பி | 156108 ஏ |
| 156108 பி | 156108 ஏ |
| 156109 டி | 156111 சி |
| 156111 பி | 156174 ஏ |
| 156174 பி | 156174 ஈ |
| 156174 டி | 156174 சி |
| 158233 ஏ | 160062 ஏ |
| 160062 பி | 160372 ஏ |
| 160279 பி | 160279 சி |
| 160281 ஏ | 160346 ஏ |
| 160346 பி | 160346 சி |
| 160356 ஏ | 162103 ஏ |
| 162519 ஏ | 162533 ஏ |
| 162533 சி | 162533 சி |
| 162533 டி | 162533 ஈ |
| 162615 ஏ | 162615 பி |
| 162615 சி | 162615 டி |
| 162615 ஈ | 162615 எவ் |
| 162625 ஏ | 162625 பி |
| 162950 ஏ | 164692 பி |
| 164996 ஏ | 164996 பி |
| 164994 சி | 164996 டி |
| 164996 ஈ | 164996 எவ் |
| 165028 ஏ | 165028 பி |
| 165062 ஏ | 165104 ஏ |
| 165116 ஏ | 16534[illegible] ஏ |
| 167206 ஏ | 167212 ஏ |
| 167232 ஏ | 167324 ஏ |
| 167324 பி | 167324 சி |
| 167324 டி | 167324 ஈ |
| 167324 எவ் | 167324 ஜி |
| 167359 ஏ | 167368 ஏ |
| 167424 ஏ | 167424 பி |
| 167424 சி | 167470 ஏ |
| 167470 பி | 167470 சி |
| 167482 ஏ | 167482 பி |
| 167795 பி | 167795 சி |
| 167795 சி | 167795 டி |
| 167895 ஏ | 167955 ஏ |
| 167955 பி | 167955 சி |
| 168025 ஏ | 168104 ஏ |
| 169532 ஏ | 169599 ஏ |
| 169607 ஏ | 169607 பி |
| 169607 சி | 169607 டி |
| 169680 ஏ | 169680 பி |
| 169700 ஏ | 169722 பி |
| 169806 ஏ | 169806 பி |
| 169882 ஏ | 169882 பி |
| 169882 சி | 169882 டி |
| 169882 ஈ | 169882 எவ் |
| 169907 ஏ | 169909 ஏ |
| 169909 பி | 169918 ஏ |
| 169927 ஏ | 172169 ஏ |
| 172179 ஏ | 172281 ஏ |
| 172281 பி | 172286 ஏ |
| 172307 ஏ | 172324 ஏ |
| 172324 பி | 172324 சி |
| 172324 டி | 172357 ஏ |
| 172436 ஏ | 172438 ஏ |
| 172440 ஏ | 172441 ஏ |
| 172446 ஏ | 172446 பி |
| 172482 ஏ | 172517 ஏ |
| 172520 ஏ | 172523 ஏ |
| 172567 ஏ | 172567 பி |
| 172567 சி | 172602 ஏ |
| 174223 ஏ | 174224 ஏ |
| 174224 பி | 174242 ஏ |
| 174293 ஏ | 174360 ஏ |
| 174397 ஏ | 174367 பி |
| 174444 ஏ | 174471 ஏ |
| 174480 ஏ | 174480 பி |
| 174480 சி | 174499 ஏ |
| 174499 பி | 176142 ஏ |
| 176176 ஏ | 176375 ஏ |
| 176492 ஏ | 176571 ஏ |
| 182427 ஏ | |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 142579 ஏ | 142579 பி |
| 142579 சி | 142579 டி |
| 142579 ஈ | 142579 எவ் |
| 142579 ஜி | 168093 ஏ |
| 169581 ஏ | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 143656 ஏ | 143656 பி |
| 151383 ஏ | 151383 பி |
| 151383 சி | 151383 டி |
| 154791 ஏ | 154791 பி |
| 154986 ஏ | 158092 ஏ |
| 158092 பி | 158405 ஏ |
| 158405 பி | 160122 ஏ |
| 162038 ஏ | 162138 ஏ |
| 162138 பி | 162138 சி |
| 162336 ஏ | 164483 ஏ |
| 164520 ஏ | 164522 ஏ |
| 164522 பி | 164522 சி |
| 164716 ஏ | 165092 ஏ |
| 165092 பி | 165092 சி |
| 165092 டி | 165092 ஈ |
| 165142 பி | 165180 ஏ |
| 165353 ஏ | 165353 பி |
| 167268 ஏ | 167279 ஏ |
| 167279 பி | 167279 சி |
| 167279 டி | 167279 ஈ |
| 167288 ஏ | 167299 ஏ |
| 167300 ஏ | 167396 ஏ |
| 167396 பி | 167396 சி |
| 167396 டி | 167418 ஏ |
| 167418 பி | 167889 ஏ |
| 167889 பி | 167889 சி |
| 167889 டி | 168139 ஏ |
| 169489 ஏ | 169489 பி |
| 169489 சி | 169535 ஏ |
| 169805 ஏ | 169805 பி |
| 169805 சி | 169805 டி |
| 169805 ஈ | 169862 ஏ |
| 172178 ஏ | 172251 ஏ |
| 172255 ஏ | 172309 ஏ |
| 172331 ஏ | 172346 ஏ |
| 172395 ஏ | 172541 ஏ |
| 172615 ஏ | 172626 ஏ |
| 172626 பி | 174239 ஏ |
| 174239 பி | 174239 சி |
| 174239 டி | 174260 ஏ |
| 174297 ஏ | 174299 ஏ |
| 174347 ஏ | 174361 ஏ |
| 174362 ஏ | 174362 பி |
| 174368 ஏ | 174368 பி |
| 174368 சி | 174368 டி |
| 144391 ஏ | 174391 பி |
| 174391 சி | 174403 ஏ |
| 174403 பி | 174408 ஏ |
| 174408 பி | 174408 சி |
| 174431 ஏ | 174491 ஏ |
| 165142 ஏ | |

(ச)

யாழ்ப்பாணம்

## யாழ் குடாநாட்டில், கடுகதித் தபால் சேவைதாமதம்

# ஊழியர் பற்றாக்குறையே காரணம்

### பிரதம தபாலக வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் கடுகதித் தபால்களின் தாமதமான விநியோகத்திற்கு தபாலகங்களில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையே காரணம் என யாழ்ப்பாணம் பிரதம தபாலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

யாழ் குடா நாட்டினுள்ளே அவசர செய்தி அனுப்புவதற்காக அனுப்பப்படும கடுகதித் தபால்கள் கூட சாதாரண தபால்கள் போன்றே தாமதமாக விநியோகிக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் மத்தியில் தெரிவிக்கப்பட்டு வரும் புகார் குறித்து விளக்கம் தருகையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் விளக்கமளிக்கையில், முன்னர் யாழ்ப்பாண பிரதம தபால் நிலையத்தில் மாத்திரம் கடுகதி மற்றும் தந்திசேவைகளை உரிய வகையில் மேற்கொள்ள 21 தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் தற்போது இவ்வாறான சேவைகளுக்கென இரண்டு ஊழியர்கள் மட்டுமே உள்ளனர்.

அத்துடன் ஏனைய பிரதேச தபாலகங்களிலோ உபதபாலகங்களிலோ கடுகதி மற்றும் தபால் தந்தி சேவைக்கான ஊழியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

எனவே குறைந்த ஊழியர் வளத்தைக்கொண்டுநிறைந்த சேவையாற்ற முடியாத சூழ்நிலையே காணப்படுகிறது.

இருப்பினும் பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு சட்டத்திற்கு அப்பாலும் எமது சேவைகளை தொடர்கிறோம்.

சாதாரண தபால் ஊழியர்களைக் கொண்டு இயன்றவரை கடுகதி மற்றும் தந்திச் சேவைகளை உடனுக்குடன் ஆற்றி வருகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், இது விடயத்தில் தேவையான ஊழியர்களைசேவைக்கு அமர்த்தும் எமது கோரிக்கைக்கு முடிவு காணுமிடத்து பொதுமக்கள் எதுவித சிரமமின்றி கடுகதி சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனும் கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

(உ-59)

# இன்றுமுதல் செயற்படும் புதிய இணையத்தளம்

### அரசின் ஏற்பாடாம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் புதிய இணையத்தளம் ஒன்று இன்றுமுதல் செயற்படுத்தப்படவுள்ளது.

அரசகருமச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கில், செயற்படுத்தப்படும் இவ் இணையத் தளத்தை, அரசியல் யாப்பு கைத்தொழில் அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் திறந்து வைப்பார்.

WWW. g vlk என்ற முகவரி கொண்ட இந்த இணையத்தளம் உயர்கல்வி அமைச்சு தகவல் தொழில் நுட்ப அமைச்சு என்பவற்றின் கீழ் செயற்படும்.

அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்கள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் உள்ளிட்ட பல அரசுசார் தகவல்களை இந்த இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

(ச)

### தாதியர் பயிற்சிக்கென

# 4 ஆயிரம் பேரை சேர்க்க சுகாதார அமைச்சுமுடிவு

(கொழும்பு)

இவ்வருடம் முதல், வருடாவருடம் நாலாயிரம் பேரை தாதியர் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்வதற்கு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

அரசாங்க சுகாதார சேவையை மேம்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக இரண்டாயிரம் பேர் எதிர் வரும் பெப்ரவரி மாத முடிவுக்குள் தாதியர் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்; அதேவேளை, மற்றையஇரண்டாயிரம் பேர் தாதிமார் பயிற்சிக் கல்லூரிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருத்துவ சேவையில் தற்போது பதினாறாயிரம் பேர் பணிபுரிகின்ற போதிலும், இச் சேவைக்கு மேலும் பற்றாக்குறை நிலவுவதன் காரணத்தினாலேயே அமைச்சர் டபிள்யு. டி. ஜோன் சென்விரட்ண மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அதேவேளை, அரசாங்க தாதிமார் கல்லூரிகளில் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ள சுமார் இரண்டாயிரம் பேரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கும் சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

### காற்றினால்

# வாழைகள் நாசம் விரைவில் நஷ்டஈடு

[அச்சுவேலி]

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிலவிய கடும் காற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட அச்சுவேலி, புத்தூர் மற்றும் சிறுப்பிட்டி பகுதி வாழைச் செய்கையாளருக்கு, நஷ்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் புத்தூர் கமநலசேவை நிலையத்தினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய மேற்படிபகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து நஷ்ட ஈட்டு விபரம் அவ்வப் பகுதி விவசாய சம்மேளனங்களினால் தனித் தனியாக சேகரிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஷ்டஈடு காணியின் பரப்பளவு வீதத்திற்கேற்ப பணமாக வழங்கப்படவுள்ளதாகவும் விவசாய சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை, அண்மைய கடும் காற்றினால் புத்தூர் கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட பிரிவில் ஆயிரக்கணக்கான வாழைகள் முறிந்து நாசமாகி உள்ளதாயும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-14)

## இராசி பலன்

16-1-2001
தை 3, செவ்வாய்)
சப்தமி பி.ப 1.01 வரை
அத்தம் மு.ப 7 46 வரை
ராகுகாலம் 3.34- 5.04
சுபநேரம் 11.04- 12.34
சித்தம் கரிநாள்.

**மேடம்**
சத்துரு ஜெயம், புதிய முயற்சி, காரியம் கைகூடும், உடல் நலம்.

**இடபம்**
காரிய தடங்கல், புத்திரரால் கவலை, வியாதி, நிலை மாற்றம்.

**மிதுனம்**
கோளைத்தனம், தன்னம்பிக்கைக் குறைவு, கலகம், காரிய தாமதம்.

**கடகம்**
பணவரவு, இனியசம்பவம், அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை.

**சிங்கம்**
வாக்குக் கலகம், தனவிரயம், காரிய அனுகூலம், கௌரவக் குறை.

**கன்னி**
சயன சுகம், ஜனவசியம், போசன சுகம், காரியஜெயம்.

**துலாம்**
ரோகம், அலைச்சல், சுப செலவு, காரிய தாமதம்.

**விருச்சிகம்**
நினைத்த காரியம் கைகூடும், கௌரவம், நண்பர்கள் சந்திப்பு, தனவரவு.

**தனுசு**
தொழில் லாபம், முயற்சி பலிதம், மனஸ்தாபம், அதிகாரம்.

**மகரம்**
உஷ்ண ரோகம், பிரயாணம், பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
உறவினர்விரோதம், காரிய தாமதம், எதிர்பாராத பிரச்சினை, வியாதி.

**மீனம்**
பிரயாணம், சுவாரஸ்யம், போசன சுகம், காரிய சித்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது.)

வளவன்

பொங்கல் கவிதைப் போட்டியில்
பாராட்டுப்பெறும் கவிதைகளே
பிரசுரமாகின்றன



## தைமகளே தமிழர்க்கு விடிவினைத் தாராயோ

எட்டுத் திசையும் கொட்ட அதிர்ந்திடும் எறிகணை வீச்சும்
ஏற்றம் பாரா எல்லையழித்திடும் பல்குழல்களும்
வட்டமடித்து வன்மம் புரியும் வானூர்திகளும
வனாந்தரமாக மாறிவிட்ட எம்வளமிகு மண்ணும்

பட்ட மரமாய் பரிதவிக்கும் பல குடும்பங்களும்
பலப்பலவாக பெருகிவரும் மனிதப்புதைகுழிகளும்
எட்டவிலகி, எம்மவர்க்கு இனி நல்லொருகாலம்?
கிட்ட வழி செய்வாயோ தைத்திருமகளே

**சிவஜா சிவநேசன்**
கந்தர்மடம்

★ ★ ★

போர் முழக்கம் சூழ்ந் தெமது
புலன்கள் சோர்ந்து போகையிலே
ஊர் பிரிந்து எமது உறவுகள்
உறவுக்காய் ஏங்கி அலைகையிலே
பார் ஆள்வோர் எமது நிலை
பாரா முகமாய் இருக்கையிலே
கார்முகில் பொழிந்துழவன் களித்தல்போல்
தைமகளே தமிழருக்கு விடிவுதாராயோ?

**அபிர்ராஜன்**
யாழ்ப்பாணம்

★ ★ ★

பூத்த புதுமலரே பூங்குயிலே வாராயோ
புதுமை விழிமலர்த்திப் புத்துவகைக் காக்காயோ
கனிவோடு இதயங்கள் புன்னகைக்க வாராயோ
கலங்காமல் தாளமிட புதுராகம் தாராயோ
நம்பிக்கை ஒளியை நீ நனவாக்கி மகிழாயோ
நிரந்தரமாய் சுதந்திரமாய் நாம் வாழ வாராயோ
தமிழினத்தின் மூச்சினை நீ முரசறைந்து நில்லாயோ
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ!

**நிருந்திகா சிவநேசன்**
கந்தர்மடம்

★ ★ ★

அகதி எனும் முத்திரையில்-நிதம்
அவலங்கள் நிறைந்த வாழ்வும்
இகமதில் இன்னல்களால்-தினம்
இனிய சுகம் இழந்த தாழ்வும்
சக்திச் சாகரப் புதைகுழியாய்-கொடிய
பகைப் புலச் சூழ்வும்-மாற
மகமாரித் தைமகளே-தமிழர்க்கு
விடிவு தனைத் தாராயோ

**மு. சுயர்சன்**
கோண்டாவில்

★ ★ ★

தையலென நளினமிட்டுத் தைத் திருநாள்
தைமுதலில் வந்தது பார் பொங்கலிட
வையகத்து மாந்தரெலாம் விளை வெடுத்து
வைதேவி அவள் குளிர பானைவைத்து
கையதிலே பழம்பறித்து படைத்து அங்கு
கைங்கரியம் ஆக்கி மனம் மகிழ்வதற்கு
மையலிட்ட இக்கொடிய போர் மழையால்
மைவிழி நசிந்து நீர்சிந்தும் எம்மவர்க்கு

தையதிலே ஒருவிடிவு தோன்ற வந்த
தைமகளே உனைப் பார்த்துக் கேட்கின்றோம்
கையதிலே அழுத்துகின்ற சுமையகற்றி
கைதியென வாடுகின்ற வாழ் வகற்றி
தையலின்றி கிழிந்துபோன உடை யகற்றி
தைமகளே தமிழருக்கு விடிவுதனைத் தாராயோ
பையதிலே தீர்வுதனை அள்ளிவந்து
பைந்தமிழை பார் மகிழச் செய்வாயோ?

**சூரியநிலா**
ஈச்சமோட்டை

★ ★ ★

எட்டுத் திக்கதிலும் இருந்தென்றும் வாடுகின்ற
கட்டற்ற கவலையெமை யேன்வந் தடைந்ததுவோ?
ஈட்டிபட் டிறக்கின்ற இன்னலெல்லா மெம்மண்ணில்...
எட்டிவந் தடைந்ததேனோ? இதுவுமொரு நீதிதானோ?
நாட்டில்... நலமோடு நாமிருந்த காலமெங்கே?
வாட்டும் துயரத்தில் வசந்தமும் வீழ்ந்ததென்ன?
கேட்டுநாம் கிழர்ந்தெழுந்தும் கோலமிங்குமாறவில்லை.
தைமகளே தமிழர்க்கு விடிவுதனைத் தாராயோ?

**கந்தசாமி முருகதாஸ்**
(வல்வெட்டித்துறை)

★ ★ ★

எத்தனை பொங்கல்கள் பொங்கிப் படைத்தோம்- இன்று
இரத்தம்தான் பொங்குது எங்களின் மண்ணில்
பெற்றவர் பார்க்க துடிக்கின்ற குழந்தைகள்
முற்றத்தில் விழுந்து வெடிக்கின்ற குண்டுகள்-இங்கு
அந்நியர் தொல்லைக்கு எல்லையும் இல்லை!
ஆண்ட தமிழினம் மீண்டும் அரசாள-நாங்கள்
கண்ட கனவுகள் இன்றே நனவாக-புதிய
ஆண்டின் தைமகளே விடிவுதனைக் கொண்டுவா!!!

**அரியகுமார் ஸ்ரீகரன்**

# வீடுகளில் திருடப்படும் மின்மாற்றிகள் கடைகளில் விற்பனையாகின்றன

## மின்சார சபையினர் எச்சரிக்கை

மின்மானிகள் திருடர்களினால் கழற்றப்பட்டு வர்த்தக நிலையங்களில் விற்கப்படும் சம்பவங்கள் யாழ்ப்பாணப் பகுதிகளில் வெகுவாக அதிகரித்து வருவதாக மின்சார சபை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்;

பெரும்பாலான வீடுகளில் பாவனையில் இல்லாத மின்மானிகள் கழற்றப்படுவதுடன் அவை கடைகளில் கூடிய நிலையில் விற்கப்படுவதாக எமக்கு ஆதார பூர்வமான தகவல்கள் கிடைத்துள்ளன.

வீடுகளிற்கு மின்னிணைப்பு வழங்கப்படும் சமயங்களில் மின்சார சபையினர் பொருத்தும் மின்மாற்றிகளே பாவிக்க வேண்டும்.

ஏனைய மின்மாற்றிகள் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது. எனவே பொதுமக்கள் வர்த்தக நிலையங்களில் விற்கப்படும் இவ்வாறான மின் மானிகளை வாங்குவதில் எதுவித பிரயோசனமும் இல்லையெனவும் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் களவாக கொண்டுவரப்படும் மின்மானிகள் எவற்றையும் கொள்வனவு செய்யவேண்டாம் என வர்த்தக பிரமுகர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கணக்கு வழக்கில் தகராறு கத்திக்குத்தில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

கணக்கு வழக்கினால் எழுந்த பிணக்கில் சகபாடியின் கத்திக்குத்துக்கு இலக்காகிய வீடியோ உரிமையாளர் குடல் வெளியேறிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த மூர்த்தி வீடியோ உரிமையாளர் துரைசிங்கம் கமலநாதன் (வயது 26) என்பவரே கத்திக்குத்துக்கு இலக்காகியவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் அறிய முடிந்ததாவது

மேற்படி வீடியோ உரிமையாளரிடம் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்த பாடசாலைமாணவரானசுபாகரன் (வயது 17) அவரது தொழில் ரீதியான கணக்கு வழக்குகளைகவனித்து வந்தார்.

இந் நிலையில், நண்பர் பண விடயத்தில் பெரும் மோசடி புரிந்திருப்பது தெரியவரவே வீடியோ உரிமையாளர் அவரை தண்டித்ததோடு மோசடி செய்த பணத்தை திருப்பிச் செலுத்த கால அவகாசமும் வழங்கியிருந்தார்.

இது இவ்வாறிருக்க கடந்த 10 ஆம் திகதியன்று இரவு 10.00 மணிக்கு வீட்டின் பின்பக்கம் சென்ற வீடியோ உரிமையாளரை மோசடி புரிந்த நண்பர் கத்தியால்மூன்று தடவைகள் பலமாகத் தாக்கியதாகவும்,

இந்தச் சத்தத்தைக் கேட்டு அவ்விடம் விரைந்து இச்சம்பவத்தை தடுக்க முயன்ற 12 வயது சிறுவன் துரைசிங்கம் நிரோன் என்பவரும் கையில் படுகாயமுற்றதாகவும் தெரியவந்துள்ளது.

இதேசமயம், கத்தியால் குத்திய நபரை ஊரவர்கள் பிடித்துக் கட்டி வைத்தவேளை அதனையும் மீறி வெளியேறி தலைமறைவு வாழ்க்கை நடத்துவதாகவும் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-12)

# அடையாள அட்டைகளைத் தொலைத்தோர் அவற்றை பெற்றுக் கொள்ளலாம்

## யாழ்.பொலிஸார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடத்தில் தேசிய அடையாள அட்டை மற்றும் விசேட அடையாள அட்டை என்பனவற்றை தொலைத்தவர்கள் உரிய அத்தாட்சியுடன் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாமென யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

சீவரெத்தினம் மணிபல்லவன் (ஆஸ்பத்திரிவீதி கொட்டடி), நடராசாதிருவேலழகன் வதிரிகரவெட்டி), சிவஞானம் தனலெட்சுமி (வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம்), குட்டியன் பாலசிங்கம் (குட்செற்வீதி கோண்டாவில் மேற்கு), தருமலிங்கம் ரவீந்திரன் (சென், செபஸ்தியார் வீதி கோண்டாவில்), மகிதா தங்கராசா (தேவாலயடி குப்பிளான் தெற்கு), சரவணமுத்து கனகசபை (மல்லாகம் வலிவடக்கு), பொன்னையா கசிதா (8ம்யூனிட்தருமபுரம் கிழக்கு -பளை), சுப்பிரமணியம் கனகராசா (வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன் கேணி), இராசா சச்சிதானந்தன் (குருநாதசாமிகோவிலடி வித்தகபுரம்), விசுவநாதர் தனிகாசலம் (சிவன் கோவிலடி புத்தூர் மேற்கு), முத்துக்குமாரு நடராஜா (பழைய கண்டி காரைநகர்), சிவக்கொழுந்து நாகராசா (தோப்புவீதி மட்டுவில் வடக்கு), டிங்கிரிபண்டாகே அனுயாவதி (தலவா- அனுராதபுரம்) என்ற தேசிய அடையாள அட்டையும் அங்குள்ளன.

# சோதனைச் சாவடிகளில் ஆசிரியர்களுக்கு சலுகை

## இராணுவஅதிகாரி தெரிவிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசபாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இராணுவ சோதனைச் சாவடிகளில் விஷேட சலுகையளிக்கப் படவுள்ளது. இதற்காக ஆசிரியர்களது விபரங்கள் கோரப்பட்டுள்ளதாக இராணுவ கட்டளையதிகாரி வி.ஆர்.எல். அன்ரனீஸ் தெரிவித்தார்.

இராணுவ வீரர்கள் சிலர் ஆசிரியர்களுடன் கடினமான முறையில் நடந்து கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஆசிரியர்களது பெயர் விபரங்கள் சோதனைச் சாவடிகளுக்கு அனுப்பப்பட்டு பரிசோதனை நடவடிக்கைகளில் முன்னுரிமையளிக்கப்படுமென அந்த இராணுவ அதிகாரி மேலும் கூறினார்.

ஆசிரியர்களது மனம் புண்படும் வண்ணம் செயற்படும் இராணுவ வீரர் பற்றிய தகவலை உடனடியாக தனக்கு அறியத்தரவேண்டும். அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

(க-108)

# ஈச்சமோட்டை வீதியை, திருத்தக்கோரி மாநகர ஆணையாளருக்கு மகஜர்

[ஈச்சமோட்டை]

நீண்ட காலமாக திருத்தப்படாது பொது மக்களுக்கு பெரும் இடையூறு விளைவித்து வரும் ஈச்சமோட்டை வீதியை, திருத்தித்தருமாறு கோரி, அவ்வூர் மக்களால் ஒப்பமிடப்பட்டு யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு கடிதமூலம் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ் வீதியைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்ட போதும் நடைமுறைப்படுத்தாமை,

1998 ஆம் ஆண்டு வீதி திருத்துவதற்கென தீர்மானிக்கப்பட்ட போதிலும் தார் இன்மையை காரணம் காட்டி திருத்தம் கைவிடப்பட்டமை,

சென்ற ஆண்டுகளில் இவ் வீதியை அண்டியுள்ள ஏனைய வீதிகள் திருத்தப்பட்டபோதிலும் மேற்படிவீதி புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-59)

# ஆலயம் புனருத்தாரணம்

(மல்லாகம்)

உடுவில் கற்பகோணப் பிள்ளையார் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் நடைபெறுகின்றன.

ஆலய பரிபாலன சபையினரால் இத் திருத்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வேளையிலும் இத் திருத்த வேலைகளுக்கு நலன் விரும்பிகளின் நிதி உதவியும் வரவேற்கப்படும். (ச-ப-14)

# கசிப்பு வேட்டை

அண்மையில் புத்தூர் வடக்கு கிராம சேவையாளரின் உதவியுடன் பொலிஸ் குழுஒன்று ஆவரங்கால் மேற்கு பத்தாம் கட்டை பகுதியில் 40 லீற்றர் கசிப்பினை கைப்பற்றியுள்ளது.

அத்துடன் தொடர்புடைய நபர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது 16 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதாகவும்தெரியவந்துள்ளது. (உ-57)

# செய்தித் துளிகள்

## திருத்தப்படாத கான்கள்

(மல்லாகம்)

சுன்னாகம் பிரதான வீதி மற்றும் சந்தைப்பகுதியைச் சுற்றியுள்ள கழிவு நீர் செல்லும் கான்கள் நீண்டகாலமாகத் திருத்தப்படாதுள்ளமையால் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு வழிவகுக்கின்றது.

மேற்படி பகுதிகளிலுள்ள கால்வாய்களின் சீமெந்துப் பிளாற் வெடித்து அதனூடாக கழிவு நீரின்துர்நாற்றம் வீசுவதோடு, நீர் ஓடமுடியாதவாறு தடைகள் ஏற்பட்டு தேங்கியும் நிற்கிறது.

இதனால் சுற்றுச் சூழல் சுகாதாரம் சீர்கெடக் கூடிய அபாயம் ஏற்பட வழிவகுக்கின்றது என அப்பகுதியின் வர்த்தகர்களும், பொதுமக்களும் தெரிவித்துள்ளதோடு அவற்றை தகுந்த முறையில் திருத்தி அமைத்து உதவும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ச-ப-14)

## அனுமதிகள் வழங்கப்படுகின்றன

(கோப்பாய்)

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் தரம் ஒன்றுமுதல் தரம் பதினொன்று வரையான வகுப்புக்களில்கல்விபயிலும் மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்கப் படுவதாக வித்தியாலய அதிபர் எஸ். அகிலதாஸ் தெரிவித்துள்ளார். (இ)

## மரத்தால் வீழ்ந்து காயம்

[யாழ்ப்பாணம்]

மரத்தை வெட்டும் நோக்கில் அதே மரத்தில் ஏறியவர் தவறிவீழ்ந்ததில் தலையிலும் முகத்திலும் காயமடைந்துள்ளார்.

குருநகரைச் சேர்ந்த அன்ரன் தர்மராஜ் (வயது28) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(உ-104)

## பெண்கள் கண்சிகிச்சை விடுதி திறப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில வருடங்களாக பாவிக்கமுடியாத நிலையில் காணப்பட்ட யாழ். போதனாவைத்தியசாலையின் பெண்களுக்கான கண் சிகிச்சை விடுதி (இல. 19) மீளப் புனரமைக்கப்பட்டு நேற்றைய தினம் மிக எளிமையான முறையில் திறந்துவைக்கப்பட்டது.

இதனையடுத்து ஆண்களுக்கான கண்சிகிச்சை விடுதியில் (இல. 15) நிலவிவந்த இடப்பிரச்சினை தீரும்என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில், பெண்களுக்கான கண்சிகிச்சை விடுதி பாவிக்க முடியாதநிலையை அடைந்ததையடுத்து ஆண் பெண் கண்சிகிச்சை நிலையம் 15 ஆம் இலக்க விடுதியில் ஒன்றாக இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (உ-104)

## வீதி செப்பனிடல்

(மல்லாகம்)

கந்தரோடை அருளானந்த பிள்ளையார் கோயில் வீதி செப்பனிடப்பட்டு வருகிறது.

இதனால், இதுவரை காலமும் பல சிரமங்களின் மத்தியில் பிரயாணம் செய்த பிரயாணிகள் இனி சௌகரியமாகப் போக்குவரத்தினை மேற்கொள்ள முடியும்.

(ச-ப-14)

## கிளாலியில் தாக்குதல்

(கொழும்பு)

கிளாலிப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் நால்வர் உயிரிழந்திருக்கலாமென படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை அவதானித்தே கடந்த 12 ஆம் திகதி இத்தாக்குதல் இடம்பெற்றதாக படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது. (க)

## துன்னாலையில் ஒருவர் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

துன்னாலைப் பகுதியில் மிதிவெடியில் அகப்பட்ட பொதுமகன் ஒருவர் வலது கால் முழங்காலிற்கு கீழ் துண்டிக்கப்பட்ட நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணபதி ஹர்சன் என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவராவர். (க)

## குருக்கள் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பிலிருந்து மன்னார் இந்து ஆலயத்திற்கு சென்ற ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நடராஜாக் குருக்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இவருடன் இவரது உறவினர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (ந-5)

## மிதிவெடிகள் செயலிழக்க வைப்பு

(கொழும்பு)

கடந்த 13ஆம் திகதி தனங்கிளப்புப் பகுதியில் இடம்பெற்ற தேடுதல்நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட 35 மிதிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டதாக ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது.

(உ)

## எச் என்.டி.ஏ மாணவர் கலந்துரையாடல்

யாழ். உயர் தொழில் நுட்பக் கல்லூரியில் 2000 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றிய எச்.என்.டி.ஏ. 2 ஆம் வருட பகல், மற்றும் மாலை நேர மாணவர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10.00 மணிக்கு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சகலமாணவர்களையும்கலந்து கொள்ளுமாறு மாணவப்பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

[ச-109]

## ஆத்மீக நூல் தினம்

(யாழ்ப்பாணம்)

கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சாயிபாபா களஞ்சியத்தின் ஓராண்டு பூர்த்தியையொட்டி, ''ஆத்மீக நூல்தினம்'' அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி எதிர் வரும் 20 ஆம் திகதி காலை 9 மணி முதல் மாலை வரை சாயிபாபா களஞ்சியத்தில் ஆத்மீக நூல்களின் கண்காட்சி இடம் பெறவுள்ளது.

(உ-104)

## இன்று ஒரு தகவல்

# துன்பம் துணிவை அழிக்கும்

ஈசாப்பின் கதைகளில் ஒன்று. ஏரியில் தன்னுடைய பிரதிபலிப்பைப் பார்த்துக் கொண்ட ஒரு கலைமான், ''நான் எவ்வளவு அழகும் சக்தியும் வாய்ந்தவனாக இருக்கிறேன். என்னுடைய அழகான தலை, உடம்பு இவற்றையும் உரம் மிகுந்த வலுவான என் கால்களையும் பார். அதுமட்டுமா? என்னால் எவ்வளவு வேகமாக ஓட முடியும் தெரியுமா?'' என்று தன் குட்டியிடம் பெருமையடித்துக் கொண்டிருந்தது. அப்போது, வேட்டை நாய்கள் குரைக்கும் ஓசை கேட்டதும் உடனே ஓட்டம் பிடித்த அந்தக்கலைமான் பல மைல்தூரம் ஓடிவிட்டு, மூச்சுத் திணறத் திரும்பி வந்தது. ''நீ மிகவும் சக்திவாய்ந்தவன் என்று இப்போதுதானே என்னிடம் சொன்னாய்? ஆனால் நாய்கள் குரைக்கும் ஓசை கேட்டவுடனேயே ஓடிவிட்டாயே. அது ஏன்?'' என்று அதனுடைய குட்டி கேட்டது ''நீ சொல்வதெல்லாம் சரி மகனே ஆனால், நாய்கள் குரைக்கும் ஓசை கேட்டவுடனேயே என்னுடைய தைரியமெல்லாம் பறந்தோடிவிடுகிறது'' என்று மான் பதிலளித்தது. நமது நிலையும் அது போலத்தான் இருக்கிறது.

நாம் மனித குலத்தைப் பற்றி உயர்வாக நினைக்கிறோம். நாம் மிகவும் பலமும், தைரியமும் வாய்ந்தவர்கள் என்று நம்மைப்பற்றி நினைக்கிறோம். பல அரிய தீர்மானங்களைச் செய்து கொள்கிறோம். ஆனால் துன்பம், ஆசை என்ற நாய்களின் குரைப்புச் சத்தம் கேட்கும் போது. கதையில் வரும் மானைப்போலவே நாம் நடந்து கொள்கிறோம்.

நிலைமை இதுவானால், நற்போதனைகளால் எல்லாம் என்ன பயன்? நிச்சயம் பெரும் பயன் இருக்கிறது. அதாவது விடாமுயற்சி கடைசியில் வெற்றிதரும் என்பதே அது ஒரே நாளில் எதையும் சாதிக்க முடியாது.

நன்றி
ஞானயோகம்

# கணனி இன்றி செயற்படும் தலைமை அலுவலகம்
## முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட-பிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைமைக்காரியாலயத்தில் புகைப்பட பிரதி இயந்திரம், கணனி என்பனபயன்பாட்டில்இல்லையென மேற்படி சாலை முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதும் கூட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லையென்றும் மேலும் தெரிவித்தார்.

மேற்கண்ட உபகரணங்கள் இல்லாமையால் அலுவலக செயற்பாடுகளை துரிதகதியில் மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் அவர் மேலும் கவலை வெளியிட்டார். (க-12

# ஆசிரிய நூலகர் 538 பேர் தெரிவாவர்
## பெப்ரவரி 7ல் நியமனம்

(திருமலை)

நாடெங்கிலும் உள்ள நாலாயிரம் பட்டதாரி ஆசிரியர்களை ஆசிரிய நூலகர்களாக நியமிக்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

இந்த நாலாயிரம் ஆசிரிய நூலகர்களில் சுமார் 538பேர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த 11ம் திகதிமுதல் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் நடைபெற்றுள்ளது.

க.பொ.த.சா தாரணதரத்தில் ஆங்கிலபாடத்தில் திறமைச்சித்தியுடன் 40 வயதிற்குட்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

அடுத்த மாதம் 7ம் திகதி நியமனம் பெற உள்ள இவர்களுக்குஉள்நாட்டிலும், வெளிநாட்டிலும், தகவல் தொழில் நுட்பத்துறையில், பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதுடன் இத்துறையால் மேலதிக பட்டப்படிப்பிற்கும் ஒழுங்குகள் செய்யப்படும். எனவும் மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. [வ]

# முகாம்களில் தங்கியுள்ள வவுனியா மக்கள்; மீள குடியமர புதிய ஏற்பாடு

(வவுனியா)

வவுனியா மாவட்ட அகதி முகாம்களில் வசித்து வரும் வவுனியா வாசிகள் அனைவரையும் மீளக் குடியமர்த்தும் திட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக வவுனியாத் திட்டப்பணிப்பாளர் விஜயலட்சுமி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஆயிரத்து 500 குடும்பங்கள் தரணிக்குளம், சிதம்பரபுரம், மருதங்குளம், ஆகிய பகுதிகளில் மீளக் குடியமருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு இவர்கள் வசிப்பதற்காக குடிசைகள் அமைக்கப்படவுள்ளன.

ஏப்ரல் மாதமளவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (2-4)

# நுளம்புத் தொல்லை

(மல்லாகம்)

கொக்குவில் கோண்டாவில் பகுதிகளில் அண்மைக்காலமாக நுளம்புத் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

இருப்பினும் இவற்றின் தொல்லையைத் தடுக்க சமூக ரீதியான திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-ப-14)

# மக்கள் சேவையில் ஓட்டோ

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் நன்மை கருதி நேற்று முதல் ஓட்டோ ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வலி. கிழக்குப் பிரதேச சபையின் நீர்வேலி தலைமையகத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறைந்த கட்டணத்தில் இச்சேவை இடம்பெறவுள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது

நீர்வேலி அலுவலகத்தினரின் பாவனைக்கென இவ் ஓட்டோ அனுப்பிவைக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்து. (ந)

# நலன் பேணும் சங்கம்

(வடமராட்சி கிழக்கு)

யுத்த நடவடிக்கை காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை மற்றும் வலிகாமம், கூடத்தனை மணற்காடு பகுதிகளில் தங்கி இருக்கும் பொதுமக்கள் ஒன்றிணைந்து 'இடம்பெயர்ந்தோர் நலன் பேணும் சங்கம்' ஒன்றை அமைக்கவுள்ளனர்.

இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்தல் மற்றும், அவர்களின் நலன் பேணல் ஆகியனவே இவ் அமைப்பின் முக்கிய குறிக்கோளாகும். (உ-41)

# பொங்கல் நிகழ்வுகள்

(தென்மராட்சி)

பொங்கல் நிகழ்வுகள் வெகு அமைதியான முறையில் யாழ்ப்பாணப் பகுதிகளில் அனுட்டிக்கப்பட்டன.

ஆலயங்களில் பூசைவழிபாடுகள் இடம்பெற்றதுடன் அடியார்கள் பலரும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (க-77)

★ ★ ★ ★

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க சைவச் சிறுவர் இல்ல மாணவர்கள் தைப்பொங்கல் விழாவினைச் சிறப்பாகக்கொண்டாடினார்கள்,

இவ்விழாவின் போதுபேராசிரியர் வன்னியசிங்கம் ஞாபகார்த்தமாக சைவச் சிறுவர் இல்ல மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் பேராசியர் அ.சண்முகதாஸ், வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி செ. அழகரத்தினம், யாழ்ப்பாணம்தேசியக் கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள் (வ)

# 11 தமிழ் இளைஞர் கைது

(மத்தளை)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மாத்தளை நகர பகுதியில் திடீர் தேடுதல் ஒன்றைப் பொலிசார் மேற்கொண்டதில் 11 தமிழ்இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 11 தமிழ் இளைஞர்களும் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது. (வ)

# விலை வீழ்ச்சி

(கல்வயல்)

யாழ். குடா நாட்டு சந்தைகளில் மரக்கறிகளின் விலை வீழ்ச்சி கண்டுள்ளது. (உ-111)

# அமைச்சர் அஷ்ரப்பின் கொலை பற்றிய நூல் தீ மூட்டி எரிப்பு

(திருகோணமலை)

தமது சொந்த தேர்தல் தொகுதிக்கு ஹெலிகொப்டரில்செல்லும்போது மரணமடைந்த முன்னாள் அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப்பின் மரணம் தொடர்பாக விமானப்படையினரால் ''விபத்து'' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கை தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

அமைச்சர் அஷ்ரப்பினுடைய மரணத்தின் பின்னணியில் சதி நடவடிக்கைகள் இருப்பதாகவும், அரசு இவ் விடயத்தை மூடிமறைத்து மழுங்கடித்து விட்டதாகவும் தெரிவித்தே விமானப்படையினர் வெளியிட்ட அறிக்கை அமைச்சரின் ஆதரவாளர்களால் கொழுத்தப்பட்டது.

அரசாங்கம் அவரின் மரணம் தொடர்பாக மூடி மறைத்து மழுங்கடிப்புச்செய்தமை கண்டனத்துக்குரியது.

எனவே உடனடியாக சுதந்திர விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு அமைச்சரின் மரணத்திலுள்ள மர்மம் துலக்கப்பட வேண்டுமென்று அஸ்ரப் மன்றத்தலைவர்சட்டத்தரணிஅன்வர்இஸ்மாயில்அரசாங்கத்தை கோரியுள்ளார். அறிக்கை எரிப்பதில் சுமார் இரண்டாயிரம் முஸ்லிம்கள் கலந்து கொண்டனர். (இ)

# மே மாதம்முதல் தொலைபேசிக் கட்டணம் 15சதவீதத்தால்அதிகரிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் தொலைபேசிகளுக்கான கட்டணம்15வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

இக்கட்டண அதிகரிப்பு இவ் வருடம் மே மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அண்மைக்காலமாக வெளியூர் தொலைபேசி அழைப்புக்கான கட்டணத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் குறைவாகவுள்ளது

இதனையடுத்தே உள்ளூர் தொலைபேசி அழைப்புக் கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டியுள்ளதாகவும் இக் கட்டண அதிகரிப்பு, தொலைபேசி இணைப்புக்கும் பொருந்தும் என ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இத்தொலைபேசிக்கட்டண அழைப்புக்களுக்கான அதிகரிப்பு 1998ல் 25 வீதத்தாலும், 1999ல் 25 சதவீதத்தாலும், கடந்த ஆண்டு 20 வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (வ

# வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர், எம்பிக்கள்சந்திப்பு

(ஏறாவூர் நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களை மாகாண ஆளுநர் அசோக ஜயவர்தன இன்று செவ்வாய்க் கிழமையன்று கொழும்பில் சந்திக்கவுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள்குறித்து இச்சந்திப்பின் போது ஆராயப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய காலங்களைப் போலில்லாது நடைமுறைப் படுத்த வேண்டிய திட்டங்களை நன்கு அடையாளங் காண்பதே இச்சந்திப்பின் நோக்கம் எனத் தெரியவருகிறது. (வ-108)

# மாணவர்கள் பாதயாத்திரை

நாட்டில் சமாதானம் வேண்டி 300க்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் இணைந்து பொத்துவிலில் பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டனர்.

# துழாவிரும் தொண்ரு

(ஒரு மறுவரைவு)

யாருமே எங்கள் தாமரைக் குளத்தை
இறைத்திட முயன்றதே இல்லை
தூர நின்றிங்கே துழாவிடும் தொண்டே
தொண்டென்று கருதினோம்.

இதனால்...

வாரம் ஒன்றுக்கு நாற்பது தடவை
ஆயினும், குட்டையைக் குழப்பும்
பேரவாவோடு, பொழுதையும் துரத்தி
பேச்சிலும் சலிப்பின்றித் திளைப்போம்.

தேங்கிய அழுக்கும் பாசியும் அகற்றித்
திருந்திய திவ்வியமான
பாங்குடன் தெளிந்த பளிங்குபோல் நீரைப்
பார்க்கலாம் - முயற்சி, நாம் செய்தால்
நாங்களோ சும்மா குட்டைகள் குழப்பும்
'நாகரிகத்தையே' உடையோம்
ஓங்கிய பாசி ஒழிந்தபாடில்லை
'ஒவாய்க்கென்ற நறுமணம்' வேறு!

இறைக்கவோ எவரும் துணியவே இல்லை—
இது வரை நினைக்கவும் இல்லை
வெறுப்பினால் உறவு விலகிய நிலையில்
வீணிலே காலத்தைக் கடத்தும்
குறுக்கு மார்க்கத்தைக் கொள்கையாய்க்
கொண்டோம்
குட்டையை அடிக்கடி குழப்பி,
உறுக்கியும் பேசிப் பிழைகளைப் பிறரின்
தலைகளிற் சுமத்தி நாம் உழல்வோம்.

இ. முருகையன்

# எல் சல்வடோரில் நிலநடுக்கம் நூற்றுமுப்பதுபேர் பலியாகினர்

(இலண்டன்)

மத்திய அமெரிக்காவிலுள்ள எல்சல் வடோரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் நூற்றுமுப்பதிற்கு மேற்பட்டோர் இறந்துள்ளார்கள்.

இந்த நிலநடுக்கத்தால் பல வீடுகள் தரை மட்டமாயின வென்றும் சல்வடோருக்கருகில் பெரிய மண் சரிவொன்று ஏற்பட்டதென்றும் அதில் ஆயிரக்கணக்கானோர் அமிழ்ந்திருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பல குடும்பங்கள் முற்றாகவே அழிந்து விட்டன வென்றும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்பு வேலைகளும் நிவாரண உதவிகளும் முடுக்கி விடப்பட்டபோதும் பெருந்தொகையானோர் பாதிக்கப்பட்டிருக்கலாமென்பதால் அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகஅந் நாட்டு அதிபர் தெரிவித்தார். அதே வேளை உலக நாடுகளை உதவும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலநடுக்கம் அயல் நாடுகளிலும்தென்பட்டதாகவும் சேத விபரம் எதுவும் தெரியவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அங்கு விமான நிலையங்கள் மூடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

## உலக தரிசனம்

## மார்ச்சில் அதிபர் தேர்தல்

(கம்பாலா)

உகண்டாவின்ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி இடம் பெறும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்தேர்தலில் ஆறு வேட்பாளர்கள் போட்டியிட உள்ளதாகவும் போட்டி கடுமையானதாக இருக்கும் என்றும் அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (து)

# டாக்காவில் இடம்பெற்ற நதி நீர் பகிர்வு மாநாடு

### இந்தியாவும் பங்குபற்றியதாம

[டாக்கா]

பங்களாதேஷும் இந்தியாவும் இருநாடுகளுக்கும் பொதுவான நதிகளின் நீரினைப் பகிர்வது தொடர்பான கூட்டத்தை டாக்காவில் நடத்துகின்றது

ஜமுனா, பிரமபுத்திரா உட்பட ஐம்பது நதிகளின் நீர் பங்கீடு பற்றி ஆராய்வதற்கு இரண்டு நாள்கூட்டம் நடைபெறுகிறது.

அனேகமான நதிகள் இமைய மலையிலிருந்து ஆரம்பித்து இந்தியாவில் பாய்ந்து பங்களாதேஷின் ஊடாகச் சென்று கடலில் வீழ்கிறது.

இந்த நதிகளின் நீரினை எங்கு இந்தியா தடுக்கலாம் எவ்வளவு தடுக்கலாம் பங்களாதேஷிற்கு எவ்வளவு நீரைக் கொடுக்கலாம் என்று இந்த இரண்டு நாள் மகாநாட்டின்போது பேச்சுகள் இடம்பெற்றன. (து)

### இந்தோனேஷியாவில்

# இனமத பூசல்களை ஒழிக்க மக்கள் முன்வர வேண்டும்

## உபஅதிபர் மேகவதி அழைக்கிறார்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் நடக்கும் இனமத வன்முறைகளை தவிர்த்துக் கொள்ளும்படி உப ஜனாதிபதி மேகவதி தமது கட்சிக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

ஜகார்த்தா விளையாட்டு மைதானமொன்றில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்கையில்: இந்தோனேஷியாவில் மதப்பூசல்களும், இனப்பூசல்களும் மலிந்திருக்கின்றமை மனதுக்கு வேதனையாக இருக்கின்றது எமது கட்சியாளர்கள் இந்த பூசல்களைதவிர்ப்பதிலும், தடுப்பதிலும் முன்னின்று பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (து)

### ஈரானில்

# ஜனநாயக அரசியல் திட்டத்தை உருவாக்க அதிபர் வேண்டுகோள்

(தெஹ்ரான்)

தமது நாட்டில் சீர்திருத்தமான ஜனநாயக ஆட்சித்திட்டத்தை ஏற்படுத்தும்படி ஈரானிய அதிபர் முகமட் கடாமி தமது மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

தெஹ்ரானில் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்; புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பொழுது மதக் கொள்கைகளுக்கு முரண்பாடில்லாத முறையில் மக்களின் மனித உரிமைகளைப் பேணுவதாகவும் ஜனநாயக முறையில் அமையக் கூடியதாக தாம் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மக்கள் உருவாக்கும் பட்சத்தில்தான் அமுல் நடத்த முடியுமென்றும் அதிபர் முகமட்கடாமி தெரிவித்தார். (து)

# வைத்தியர்களுக்கு விருது முதல்வர் தகவல்

(சென்னை)

கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகள் போல வைத்தியர்களுக்கும் விருதுகள் வழங்கும் அமைப்பு நிறுவப்படும் என விருதுகள் வழங்கும் விழா ஒன்றில் உரையாற்றிய தமிழக முதல்வர் மு கருணாநிதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் 99-ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப் படத்திற்கான விருது ''படையப்பா'' விற்கு கிடைத்துள்ளது. இதில் நடித்த ரஜனிக்காந்திற்கு சிறந்த நடிகருக்கான விருது கிடைத்துள்ளது. சிறந்த நடிகைக்கான விருது ''துள்ளாத மனமும் துள்ளும்'' திரைப் படத்தில் நடித்த சிம்ரானுக்குவழங்கப்பட்டது. (க)

# பாகிஸ்தான் செல்லவிருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்த வருடத்துக்குள்தான் பாகிஸ்தான் செல்ல இருப்பதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்தார்.

மூன்று நாள் பயணமாக ஜேர்மனி நாட்டிற்கு செல்வதற்கு முன் ஜேர்மன் பத்திரிகை ஒன்றுக்குக் கொடுத்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் பாகிஸ்தான் வெளியிலிருந்து கொண்டு பயங்கர வாதத்துக்குத் தூபம் போடுவதை நிறுத்தும பட்சத்தில் தான் பாகிஸ்தான் செல்வது சாத்தியமாகுமென்றும் ஜஸ்வந் சிங் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாயின் சிம்லா உடன்படிக்கையின் அடிப்படையிலும் லாகூர் உடன்படிக்கை அடிப்படையிலும் இடம் பெறும் என்றும் தெரிவித்தார். (து)

# குறும்படத் தயாரிப்பாளர் ஷாலிமோரி காலமானார்

[புதுடில்லி]

இந்தியாவின் குறும் படத் தயாரிப்பாளரான ஷாலிபலி மோரி நேற்று மும்பாயில் காலமானார்.

எழுபத்தெட்டு வயதான மோரி பலகுறும்படங்களைத் தாயரித்து பல விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

இவருக்கு1998ஆம் ஆண்டு சாந்தாராம் விருது வழங்கிக் கௌரவித்தார்கள் ஆனந்தாவில் வாட்டர் ஆகிய படங்களுக்கு பலவிருதுகள் கிடைத்தன.

இவரின் குறுந்திரைப் படம் ஒஸ்கார் விருதுக்கு சிபார்சு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது

இவரின் இழப்பு திரைப் படத்துறைக்கு பேரிழப்பு என்றும் பலரும் இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். (து)

### கொரிய அகதிகள் படுகொலைக்கு

# அமெரிக்கருக்கு பயிற்சியின்மையே அடிப்படைக் காரணமாகும்

கொரிய யுத்தத்தின் போது பயிற்சியில்லாத அமெரிக்கத் துருப்புக்கள். கொரிய அகதிகளைக் கண்மூடித்தனமாகக் கொன்றார்கள் என்பதை இப்பொழுது இரு நாடுகளும் வெளியிட்டுள்ளன.

1950 இல் நடைபெற்ற இந்த யுத்த அனர்த்தங்கள் பற்றி இரு நாடுகளும் 15 ஆண்டுகள் விசாரித்ததில் இந்த முடிவிற்கு வந்துள்ளன.

ஒரேநேரத்தில் அமெரிக்கா வாஷிங்டனிலும் தென் கொரியா சியோலிலும் வெளியிட்டன.

இதேவேளை சம்பவத்தில் கொரிய அகதிகள் கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா ஆழ்ந்தவருத்தத்தை த் தெரிவித்துக் கொள்வதாக அதிபர் பில் கிளிங்டன் தெரிவித்துக் கொண்டார்.

கொரியா அறிக்கையை வெளியிட்டு அகதிகள் 248 பேர்தான் கொல்லப்பட்டிருக்க வேண்டும் அல்லது காணாமல்போயிருக்கவேண்டும் என்றும் அவர்களின் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (து)

# இந்தியாவுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் என்றும் தயார்

## ஆட்சியாளர் முஷாரப் தெரிவிப்பு

காஷ்மீர் பிரச்சினைகுறித்து இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்த தயார் என்று பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இது பற்றி இவர் மேலும் குறிப்பிடுகையில்;

எந்த இடத்திலும் எந்த நிகழ் குழுவுடனும் பேச்சு வார்த்தை நடத்த தாம் தயார் என்று தெரிவித்துள்ளார். ஆனால் இது குறித்து இந்தியத் தரப்பில் இருந்து பதில்எதுவும்கிடைக்கவில்லை என அவர்குறிப்பிட்டுள்ளார்

இதே வேளை, பேச்சு. வார்த்தை ஒன்றுக்காக முஷாரப் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக பாகிஸ்தான் பத்திரிகையான 'ஒஸ்போகா' செய்தி வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# தீவிரவாதிகளின் குண்டு வீச்சில் காஷ்மீர் முதல்வர் தப்பினார்

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீர் முதல்வர் பாருக் அப்துல்லா மீது கொலையாளிகள் மேற்கொண்ட தாக்குதல் முயற்சியிலிருந்து அவர் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் காஷ்மீர் செய்திகள் தெரிவித்துள்ளன.

அச்செய்திகள் மேலும் தெரிவிக்கையில்;

ஸ்ரீநகரில் நடந்த நிகழ்ச்சியொன்றில் முதல்வர் அப்துல்லா பேசிக் கொண்டிருக்கையில்; குண்டு ஒன்று மேடைக்கு மூன்று மீற்றர் தொலைவில் வந்து விழ்ந்து வெடித்ததாகவும் சிறிது நேரத்தில் இன்னொரு குண்டு கூட்டம் நடந்த இடத்துக்குப்பக்கத்திலுள்ள குளத்தில் விழ்ந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸார்வானைநோக்கி மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தினால்கூட்டம் சிறிது கலைந்து பின் கூடியது.

முதல்வருக்கு எந்த விதகாயங்களும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது

இது விடயம் தொடர்பாக முதல்வர் கருத்து தெரிவிக்கையில்; இது போன்ற மிலேச்சத்தனமானதாக்குதல்களிற்கு தான் ஒரு போதும் அஞ்சப் போவதில்லை என்றார். (து)

# விபரம் சேகரிப்பு

(அச்சுவேலி)

புத்தூர் கமநல சேவை நிலைய பிரிவிற்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த நெற்செய்கையில் ஈடுபட்டு நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்குநஷ்டம் ஈடு வழங்குவதற்கானநடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் முதற் கட்டநடவடிக்கையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விபரங்கள் அவ்வப்

7ஆம் பக்கம் பார்க்க

சருமம் செய ஒருவன் சை தூவேன் என்னு பெருமையின் பீடுடையது இல்

... குறள்

# வலம்புரி

## நிதானம் வேண்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துப் பொது அமைப்புகள், உயர் கல்வி நிறுவனங்கள் மதப் பெரியார்கள், தொழிற்சங்கங்கள் எனப் பலரும் அவ்வெழுச்சி நிகழ்விற்கு தமது பூரண ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். இது இவ்வாறிருக்க,

பாதுகாப்புப் படையினர் யாழ். பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றி நேற்றுமுதல் பலத்த பாதுகாப்பை - சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இதனால் பொதுமக்கள் மத்தியில் என்ன நடக்குமோ எது நிகழுமோ என்ற ஏக்கம் அச்சம் நிலவவே செய்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் எழுச்சி நிகழ்வு சமாதானத்தை - தமிழரின் உரிமையை வலியுறுத்துவதாகவுள்ளது. அரசாங்கம் முதல் அனைத்துப் பிரஜைகளும் விரும்புகின்ற - ஆவலோடு எதிர்பார்க்கின்ற சமாதானத்தை வலியுறுத்துவது- யுத்தத்தை நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும் எனக் கோருவது ஆகிய உரிமை இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளுக்கும் உண்டு அவ்வகையிலேயே பல்கலைக்கழக சமூகமும் தனது தார்மீகக்கடமையை செய்ய முன்வந்துள்ளதெனலாம். இந் நிலையில் எழுச்சிநிகழ்வை தடுத்தே தீருவோம் எனப் படையினர் எச்சரிக்கை செய்துள்ளனர். அதற்கான ஏற்பாடுகளும் நேற்றுத் தொடங்கியுள்ளது.

யாழ். பல்கலைக் கழக சமூகமும் எழுச்சியை ஜனநாயக ரீதியில் செய்தே தீருவோம் என நிற்க, படையினரும் தடுப்போம் என்றால் விளைவு பாரதூரமாகவே அமையும்.

இந்நிலையில் படை அதிகாரிகள் நிதானமாகச் செயற்படுவதன் மூலம்- ஜனநாயக எழுச்சிக்கு ஊறு விளைவிக்காமல் நடப்பதன் மூலமே விரும்பத்தகாத விளைவுகளை தடுக்க முடியும் என்பதுடன், தமிழ்மக்களின் உரிமைகளை - சமாதான உணர்வை மதிக்கும் பக்குவம் படையினருக்கு உண்டென்பதையும் நிரூபிக்க முடியும்.

# மனித இனத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும்

# புகைப் பழக்கத்திலிருந்து மீள வழியுண்டா?

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" ஜீவன் முத்தரான திருமூலரே உடல் வளர்த்தேன் உயிர் (ஆன்மா) வளர்த்தேன் என்கிறார். மரணம் மனிதனை இரண்டு வழிகளால் கையகப்படுத்துகிறது. நோயால் ஏற்படும் இயற்கை மரணம், தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் செயற்கை மரணம் "ஒரு முனையிலிருப்பது நெருப்பு. மறுமுனையிலிருப்பது முட்டாளின் வாய்" என வர்ணிக்கப்படும் புகைத்தல் என்னும் தீயபழக்கமும் "தற்கொலையே"

### இருமல்

சட்டியில் அவியப் போகும் நண்டு இளம் சூட்டின் இன்பத்தை எண்ணிப்பார்ப்பது போன்று சவப்பெட்டிகளான சிகரட் பெட்டிகளின் விளம்பரம் அதில் நாட்டத்தை ஏற்படுத்தும், கவர்ச்சிப்படங்கள் அலங்கியானவை பெண்களின் கைகளில் சிகரட்டைக் கொடுத்து மேலை நாட்டுப் பெண்களின் சிகரட் பழக்கத்தை எம்மிடையேயும் அறிமுகம் செய்வது அதைவிட விந்தையானது. ஆண்கள்

ஆய்வுகளை நடாத்தி பல நிருபணங்களையும், எச்சரிக்கைகளையும் சதா செய்தியூடகங்கள் ஊடாக வெளியிட்டுக் கொண்டேயுள்ளனர். அவை செவிடன் காதுச் சங்கொலியாகவுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும்படி சிகரட் கம்பனிகளுக்கு எத்தனையோ நாடுகளின் நீதிமன்றங்கள் தீர்ப்புக் கூறியுள்ளன. பெறுபேறு பூச்சியமே. பல அரசுகளின் செலவுப் பற்றாக் குறையை ஈடுகட்டும் எவரும் எதிர்க்காத விலையேற்றம். மதுவரியுயர்வும், சிகரட்வரியுயர்வுமே. இராமபிரானின் கோதண்டத்தின் அடியில் நசிந்த தேரை கூறியது போன்று, இராமா வேறு யாராவது தீங்கு செய்தால் உன்னிடம் கூறலாம். நீயே செய்யும் தீங்கை யாரிடம் கூறலாம். என்ற நிலை அவற்றுடன் மது, சிகரட் கம்பனிகளின் பணபலம், அரசியல்வாதிகளின் கைகளைப் பலப்படுத்தி நிற்பது ஆய்வாளர்களின் கருத்துக்களை அடித்துச் சென்று விடுகிறது. நிதானமாய் ஆய்வுகளை வாசிப்பவன் கூட மறுகையில் சிக

இதன் தாக்கத்தால் இறப்பவர்களின் வியாதிகள் கண்டுபிடிக்கப்படுவது மில்லைஅவற்றிற்கு உரிய 'சிகிச்சையளிப்பதுமில்லை. மரணத்தின் காரணம் கண்டறியப்படுவதுமில்லை, அவை ஆவணமாக வெளிவருவதுமில்லை. எல்லா நாட்டிலும் இதற்கான வசதிகளுமில்லை, யுத்தமின்றிச் சத்தமின்றிக் கொல்லும்இவர்களின் புள்ளி விபரம் வெளிவருவதுமில்லை.

### நிக்கோற்றின்

பெற்றதாயே மரணத்தின் பின் ஒருநாள் சுணங்கி விட்டால் மூக்கைப் பிடிக்கும் நிலையில் நாம் புகைப் பிடிப்பவரைக் கண்டால் மூக்கைப் பிடிப்பதில்லை. புகைத்தலின் போது உட்செல்லும் சாம்பல் காபன், கரி, சிலருக்கு

விடுதலே. இதனால் புகைப்பவர்களுக்குசுவாசப்பைபுற்று ஏற்படுவது அதிகம். வெற்றிலையுடன் புகையிலை போடுபவர்க்கு வாய்ப்புற்று ஏற்படுவது அதிகம். வடிகால்கள் கழிவுப்பொருள்களால் அடைபடுவது போன்று புகைத்தலால் உள்புகும் சாம்பல், கரி, துகள்கள் மூலம் சளி தடிப்படைந்து வரட்டு இருமல் வாட்டிவதைக்கும் இது நெஞ்சுக்கூட்டை விரிவாக்கி இயக்கத்தைக் கெடுக்கும். நாளடைவில் சளியுடன் இரத்தம் வரும் நாளுக்கு 30 சிகரட் புகைப்பவரது சுவாசப்பையில் அரைக் கோப்பை கரி (Tar) தேங்குகிறது வெற்றிலையில் EmPhysema என்ற நோய் ஏற்படுகின்றது நிக்கோற்றின் இரத்தநாடிகளில் சுருக்கத்

## டாக்டர் ஆ. பேரின்பநாதன்

யாழ்ப்பாணம்

# மருத்துவ விளக்கம்

சிகரட்டைப் பற்றவைக்கும் பாங்கு, புகை ஊதிச்சுருளும் வண்ணஜாலம் ஆண்களே அதைக்கண்டு: பொறாமை கொள்ளுமளவிற்கு கவர்ச்சியானது இதை ஏன், எப்படிப் பற்றுகிறார்கள் என்பதும், அருவருப்புமே புகைத்தலின் முதல் அனுபவம். அதில் இருமல் தாங்காமல் பாதியில் வீசி விடுபவர் பலர். மீண்டும் ஏனோ மனமதை வட்டமிடும், இரண்டாவது தடவை சுவாசம் கொஞ்சம் சுலபமாய் அதை வழிவிடும், இந்த ஆரம்ப இருமல் யான் உன்னுடன் நிரந்தரமாய் குடிவாழப் போகிறேன் என்பதன் கட்டியமே. இதனால் தான் புகைப்பிடிப்பவனை இருமல் விடுவதுமில்லை, நித்திரை வருவதுமில்லை. அவன் வீட்டிற்கு கள்வர் போவதுமில்லை. அவனை அணுகுவது இயமதர்மராசன் மட்டுமே.

### இழப்பீடு வழங்கல்

பல ஆண்டுகளாகவே புகைத்தலால் ஏற்படும் தீமைகள் பற்றி மருத்துவத் துறை விஞ்ஞானிகள் பல

ரட் இருக்கவே அது மண்டையில் ஏறுகிறது என்கிறான்.

### வாழ்நாள் குறைதல்

புகையிலையிலும், புகையிலையை மூலப்பொருளாய் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களினதும், சிகரட்டிலும் நிக்கோற்றின் என்ற நச்சுத்தன்மையுடைய போதைப் பொருளே காணப்படுகின்றது இதன் இரசாயனக் குறியீடு $C_{10}H_{14}N_2$ ஆகும். ஆய்வுகளின்படி தனித்துப்பிரித்து எடுக்கப்படும் ஒருதுளி நிக்கோற்றினை ஊசிமூலம் ஒருவருக்கு ஏற்றினால் அந்த இடத்திலேயே அவர் மரணமடைந்து விடுவார். ஒரு சிகரட்பற்றுவதால் பாவிப்பவனது வாழ்நாள் 5 – 6 நிமிடங்களால் குறைந்து போகின்றது. உலக மக்கள் தொகையில் 300 மில்லியனுக்கு குறைந்த மக்கள் சிகரட் பாவனையால் அவதிப்படுகின்றனர். அமெரிக்காவில் மட்டும் நிக்கோற்றின் பாவனையால் நாலு லட்சம் மக்கள் மடிகின்றனர். வருடாவருடம்

வாயுக்கள் எல்லாம் சுவாசச் சிற்றறைகளில் படிவுகளை ஏற்படுத்தும் நுரை போன்ற மிக நுண்ணிய காற்றறைகளில் ஏற்படும் இப்படிவுகள் சாதாரணமாகச் சென்றடையும் தூசினை அகற்ற முடியாது திண்டாடும். சுவாசத் தொகுதிக்கு மேலதிக வேலைப்பளுவைக் கொடுக்கின்றது. இப் படிவுகளால் ஒட்சிசன் பரிமாற்ற அளவு வீதம் குறைகின்றது. இரத்தத்தில் இதனால் ஒட்சியேற்றம் குறைகிறது. அத்துடன் புகையிலையின் நிககோற்றினும், நச்சுவாயுக்களான காபநீர்ஒட்சையிட்டு, நைதரசன் ஒட்சையிட், ஐதரசன் சையினையிட் என்பன இலகுவில் இரத்தத்தில் சேர்ந்து விடுகின்றது. நிக்கோற்றின குருதியில் கலந்தவுடன் ஒரு இரசாயனத் தாக்கத்தை நரம்புத் தொகுதியில் ஏற்படுத்தவல்லது. இதனால் ஏற்படும் போதை ஒரு தற்காலிக சுகத்தை மன நிறைவை தென்பைக் கொடுக்கிறது. இது நாளடைவில் அவர்களைத் தமக்கு அடிமையாக்கி விடுகிறது. மதுவடிமை நிலையில் திருந்தியவர் கூட புகைத்தல் அடிமைநிலையிலிருந்து மீளக் கஷ்டப்படுகின்றனர்.

### முக்கிய நோய்கள்

புகைப்பதால் ஏற்படும் சில முக்கிய நோய்கள் நிற்கோற்றினின்கொடிய விளைவுபுற்று நோயை ஊக்குவிக்கும் காரணிகளை உடலில் செல்ல

தையும் கல்சியப்படிவையும் ஏற்படுத்தி, இரத்த விநியோகத்தை குறைக்கிறது. இதயத் தசைக்கும் மற்றைய பகுதிகளுக்கும் இரத்தச் சுற்றோட்டம் மட்டுப்படுத்தப்படுகின்றது. இரத்தநாடித் தடையால் உயர் இரத்த அழுத்தமும், இதயத் தசை இரத்த விநியோகத் தடையால் மாரடைப்பும் ஏற்படுகின்றது. இளம் வயதில் 35–40 வயதினரில் ஏற்படும் மாரடைப்பினால் அனேகமானோர் புகைத்தல் பழக்கமுடையவராகும். தவிர புகைக்கும் பெண்களுக்கு கருவழிதல், குறைப்பிரசவம் என்பனவும் நோய் எதிர்ப்பு வலு குறைந்த குழந்தைகள் பிறக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. கண் பார்வைக் குறைவும் ஏற்படுகிறது. புகைத்தல், புகைத்தோரை மட்டும் கொல்வதல்ல அருகிலிருப்போரையும் கொல்லும் கொடிய விஷமுடையது. புகைப்பிடிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த மனைவி, குழந்தைகளையும் அவரது புகை தினமும்தீண்டுவதால் புகைப்பவருக்கு ஏற்படும் தீமை அத்தனையும் அருகில் வாழ்வோருக்கும் ஏற்படுகின்றது. இதனால் தான் அனேகமான நாடுகளில் போக்குவரத்திலும் பொது இடங்களிலும் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு தீர்வு அரசையும், உற்பத்தியாளரையும் நம்பாது நம்மை நாம் காப்போமாக.

★ ★ ★

# யாழ். வைத்தியர்கள் அவகாசம் வழங்கியுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை வைத்தியர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேற்றுவதற்கான கால அவகாசத்தை மேலும் ஒரு வாரகாலம் பின் தள்ளியிருப்பதாக அறிவித்துள்ளனர்.

வைத்தியசாலைக்குத் தேவையான அடிப்படைக் கட்டட வசதி, மருத்துவ உபகரண வசதி, மருந்துப் பொருள் வசதி, வைத்தியர்கள் வசதி, வைத்தியர்களுக்கான சலுகை போன்ற கோரிக்கைகளை சுகாதார அமைச்சின் முன் வைத்து,

இவை நிறைவேற்றப்படாவிடத்து இம் மாதம் 15 ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவிருப்பதாக அறிவித்திருந்தமை தெரிந்ததே. (உ 12)

### விபரம் சேகரிப்பு

[6ஆம் பக்கத் தொடர்ச்சி]

பகுதி விவசாய சம்மேளனங்களின் ஊடாக சேசரிக்கப்பட்டு கமநல சேவை நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இதேவேளை அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி பகுதிகளிற் வரட்சியின் காரணமாக நூற்றுக்கணக்கான ஏக்சர் நெல் வயல்கள் சீரற்ற விளைச்சலின்றி காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-14)

# பொங்கு தமிழ் எழுச்சிக்கு இந்துபேரவையும் ஆதரவு

தமிழ்மக்களின் அபிலாசைகள் சுயநிர்ணயஉரிமையே என்பதை வெளிப்படுத்தி யாழ் பல்கலைக்கழசமூகமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்னெடுத்துள்ள பொங்குதமிழ் எழுச்சிபோருக்கு தமது முழுமையான ஆதரவைவழங்குவதாக யாழ்ப்பாண இந்துசமயப்பேரவை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

இச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஒருதேசியஇனத்தின்அபிலாசைகளையும் எதிர்பார்ப்புக்களையும் வெளிப்படுத்தும் உரிமை அந்தஇனத்தைச்சேர்ந்த சகலபிரிவினருக்கும் உண்டுஎன்பதை சுட்டிக் காட்டவிரும்புகிறோம்.

கடந்த பல வருடங்களாக கொடிய யுத்தத்தினால் சொல்லொனாத்துன்பங்களுக்கும், அழிவுகளுக்கும் உள்ளாகி இருக்கும் இனம் கௌரவமான சமாதானத்துக்காக உரத்துக் குரல் கொடுக்க முன்வந்திருக்கும் இந் நேரத்தில் சகல தரப்பினரும் பகமை உணர்வை மறந்து திரிகரண சுத்தியோடு தமது ஆதரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஜனநாயக ரீதியில் நடாத்தும் அமைதியான பேராட்டங்களுக்கு அரசு மதிப்பளித்தேயாக வேண்டும். என அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# படைக்கு ஆள்சேர்க்க பாதயாத்திரை

(கொழும்பு)

இராணுவத்திற்கும், கடற்படைக்கும் ஆட்களைத் திரட்டுவதக்கு ஊக்குவிக்கும் முகமாக காலியிலிருந்து பாதயாத்திரையொன்று பிரதிய மைச்சர் மேவின் சில்வா தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பாதயாத்திரையை பிரதமர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்காவும், பௌத்த மகாசங்கத்தினரும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இராணுவத்திற்கும் கடற்படைக்கும் ஆட்களைத்திரட்டும் பணி பாதுகாப்புப் படையினரால் மேற்கொளப்பட்டுவரும் இவ்வேளையில் இப்பாதையாத்திரை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (வ)

## இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடலொன்று இன்று காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெறுமென்றுபல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ)

### யாழ்.பத்திரிகை..

தெரிவிக்கப்பட்டுள்ளது:

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் வலம்புரி, உதயன் ஆகிய இருபத்திரிகைச் செய்திகளும், மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் தினக்கதிர் செய்திகளும் வாசிப்பதற்கே இத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவருட காலமாக இப் பத்திரிகைகளின் செய்திகள் வானொலியில் நாள் மகிழ் அரங்கம் பகுதியில் சனி, ஞாயிறு தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 7 15 முதல் சுமார் 10 நிமிடங்களுக்கு செய்திகள் வாசிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத் தடையின் மூலம் யாழ்ப்பாணத்துச் செய்திகள் உடனுக்குடன் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பினை இழந்துள்ளனர். (வ)

## நேர்முகத் தேர்விற்கு அனுமதி

(மல்லாகம்)

தகுதியிருந்தும் யாழ். மாவட்ட கல்வியியற் கல்லூரி அனுமதி நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் கிடைக்காதவர்களுக்கு நேர்முகத் தேர்வில் பங்கு கொள்ள அனுமதி வழங்கப்பட்டதாய் தெரியவந்துள்ளது.

இதற்கென விண்ணப்பித்த ஒரு சாராருக்கு உரிய காலத்தில் அனுமதிக் கடிதங்கள் வந்து சேரவில்லை.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட மாணவர்கள் பீடாதிபதி தி.கமலநாதனைச் சந்தித்து தமது பிரச்சினையை எடுத்து விளக்கியதன் மூலம் இவ் அனுமதி வழங்கப்பட்டதாய் தெரியவந்துள்ளது. (உ-ப-14)

### உயர் தொழில்

கம் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக அறிவித்துள்ளது.

நேற்று கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி நிகழ்வுக்கு ஆதரவு வழங்குவதாக மாணவர்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளனரென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-37)

### விடுதலைப்புலிகளின்..

யடுத்து தூதுவர் நோர்வே சென்று இருதரப்பினருடன் நடத்திய பேச்சுக்குறித்து நோர்வே அரசிற்கு எடுத்துக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து எரிக்சோல்ஹெய்ம் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு தொடர்பான செய்தியுடன் மீண்டும் 20ம் திகதி கொழும்பிற்கு வந்து ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேசவுள்ளாரென நோர்வே தூதரக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (வ)

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை.

**சித்த மருந்துவத்துறை மாணவர்களுக்கு 2000-2001 கல்வியாண்டுக்கான**

புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் சகல வருட மாணவர்களுக்கும் 05. 02. 2001 இல் ஆரம்பமாகும். முன்னைய அறிவித்தலின்படி விரிவுரைகள் 22.01.2001 இல் ஆரம்பிக்கப்படமாட்டாது.

துணைவேந்தர்
15.01.2001

[கி-1333]

**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

CHEMISTRY
PAPER CLASS
*IN ORGANIC*

Mr. மணியம் B.sc

(WED-THUR 2.00 மணி)

**ஆரம்பம்:** 18-01-2001 வியாழன்

(2417)

## பஸ் நிலைத்தில் குண்டு மீட்பு

(கொழும்பு)

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இரண்டுகிரனைற் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு பஸ் நிலையத்திலிருந்து கதிர்காமத்திற்கு செல்லும் பஸ் தரிப்பிடத்தில் அனாதரவாக கைவிடப் பட்டுள்ள பொதி ஒன்றிலிருந்தே இக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது. (வ)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த ஆண்டுடிசம்பர்22ம் திகதிகைதடி, கோப்பாய், அரியாலைப் பகுதிகளில் மெற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்டமேதலில்·

- இனியவன் (இராமையா டினேஸ்) ஆனையிறவு
- கலைச்செல்வன் (நிமல்ராஜா சுபாஸ்கரன்) யாழ்மாவட்டம்

ஆகிய போராளிகளும் நற்றுமுன்தினம் முல்லைத் தீவில்சுகயீனம் காரணமாக

- கதிர்வேலன் (வேலுப்பிள்ளை தவராசா) வட்டக்கச்சி என்றபோராளியும் கடந்தஆண்டுஐப்பசி25ம்திகதி பளைப்பகுதியில் படையினருடன்ஏற்பட்டமேதலில் விழுப்புண் அடைப்து கடந்த11ம்திகதி
- 2ம் லெப் தியாகவிழி/பிரியந்தினி த. தவச்செல்வி கிளிநொச்சி

ஆகியபோராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

### யார் தடுத்தாலும் -.

மனதாகத் தீர்மானித்தனர்:

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீண்டும் வலியுத்தியபோது மாணவர்கள் பலத்த கரகோஷம் எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

இதே வேளை கலைப் பீட வளாக மைதானத்தில் எழுச்சிப் போருக்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நேற்று கோண்டாவில், சுண்டுக்குழி மற்றும் வடமராட்சி ஆகிய இடங்களில் மாணவர்களின் பிரச்சாரம் இடம்பெற்றது. (ந)

### ஒரு நாளுக்கு...

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் நாளொன்றுக்கு 237 லட்ச ரூபா செலவிடப்படுகின்ற போதிலும் விடுதலைப்புலிகளை ஒழிக்கும் வரை யுத்தம் தொடரும்.

பெரும் தொகையான பணச்செலவில் யுத்தம் தொடரும் அதே வேளையில் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் இந் நடவடிக்கைக்காக 'அபிவிருத்தி'' செயலகமொன்று ஜனாதிபதியின் அனுமதியுடன் எனது பொறுப்பில் அமைக்கப்படவுள்ளது என்றார். [வ]

இன்று மட்டும்
**ஸ்ரீசெல்வா**
(யாழ்ப்பாணம்)
கமல், ரஜனி, ஜெயபிரதா நடித்த
**நினைத்தாலே இனிக்கும்**
10-30, 2-30 (ப. நே)
நோடி CD

# கொள்ளுப்பிட்டி பண்டாரவளை கற்பிட்டி பகுதியில் 27 பேர்கைது

கொழும்பு கொள்ளுப்பிட்டிப் பகுதியில் திடீர் தேடுதலை மேற்கொண்ட பொலிஸார் ஆறு சந்தேக நபர்களை கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்,

நேற்றிரவு நடைபெற்ற இத்தேடுதல் சம்பவத்திற்கு சுமார் 600க்கு மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதேவேளை பண்டாரவளைப் பகுதியில் புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் 14 தமிழ் இளைஞர்களையும் கற்பிட்டிப் பகுதியில் தேடுதல் நடாத்திய இராணுவத்தினர் 7 தமிழ் இளைஞர்களையும் கைது செய்து விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (வ)

# எழுச்சியை ஆதரித்து மகேஸ்வரன் எம்·பி அறிக்கை

தமிழ்மக்களின் அபிலாசை சுயநிர்ணய உருமையேஎன்பதை வெளிப்படுத்த யாழ் பல்கலைக்கழக சமூகமும் தமிழ்மக்களும் முன்னெடுக்கும் பொங்குதமிழ்எழுச்சி நிகழ்வுக்கு தமிழ்த்தாயின் மடியில்பிறந்த குடிமகன்என்ற வகையில் எனதுஇதயபூர்வமானஆதரவை வழங்குகின்றேன்.

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரி மகேஸ் பொங்குதமிழ்எழுச்சி தொடர்பாக நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ)

### கப்பலில்..

இக் கப்பலில் பயணம்செய்தவர்களுடைய பொதிகள் மாறி எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதில்இராசநாயகம்செல்வராசா என்பவரின் பொதி தவறியுள்ளதாகவும், அப்பொதியில் உடுபிடவைகளும், பிறஷர் பார்க்கும் கருவியும் அதனுள் இருப்பதாகவும் அதை எடுத்துச் சென்றவர்கள் துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (வ)

### இலண்டன்...

வானொலி தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

அத்துடன் பலகலை சமூகத்தின் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள் இன்று முதல் ஒலிபரப்பப்படுமென்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நேயர்களுக்கு செய்மதி ஒலிபரப்பு மூலமும், கனடாவில் வாழும் நேயர்களுக்கு கீதவாணி ஒலிபரப்பு மூலமும் சேவை விஸ்தரிக்கப்படுமென்றும் அவ்வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ் சமூகத்தின் எழுச்சிப் போருக்கு நேயர்கள் தொலைநகல் மற்றும் நேரடியாக தொலைபேசி மூலம் தமது ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதெனவும் ரி பி. சி வானொலி தெரிவித்துள்ளமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ-5)

### யாழ் பல்கலைக்கழக..

பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் பாதைகளில் பொதுமக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

பல்கலைக் கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும் அவர்களுடைய அடையாள அட்டைகள் பரிசோதனை செய்யபட்ட பின்பே பல்கலை கழகவளாவிற்கு நுழைய அனுமதிக்கப் பட்டனர்·

பல்கலைக்கழக சுற்றாடலில் குடியிருக்கும் குடியிருப்பாளர் மட்டும் தடைசெய்யப்பட்டிருந்த வீதிகளில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது ஏனையவர்கள்பலாலிபிரதான வீதியூடாகசெல்லமுடிந்தது.

என்றுமில்லாதவாறு பல்கலைக்கழக வளாகம் பொலிஸாரினதும் இராணுவத்தினரதும் முற்று முழுதான முற்றுகைக்குஆளானபோதும்மாணவர்கள்தமது ''பொங்கு தமிழ் எழுச்சி'' நிகழ்வின்பிரசார நடவடிக்கைகளைமேற்கொண்டவண்ணமிருந்ததையும்அவதானிக்கமுடிந்தது. (வ-3-12-43)

### யாழ்...

சமாதானத்தை நமதுநீண்ட நாள் அபிலாசைகளை அங்கிகரிக்கும் ஒருதீர்வே அவசியம் என்பதை ,சர்வதேச சமூகத்துக்கும் தென்இலங்கை சகோதரர்களுக்கும் வர்த்தகசமூகம்கூறவிரும்புகிறது எனஅச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

**நல்லூர் பிரதேசசபை**

**கேள்வி அறிவித்தல்**

கீழ்க் காட்டப்படும் வேலையை நிறைவேற்ற நல்லூர் பிரதேச சபையால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ் வேலைத்திட்டத்திற்கான கேள்விப்பத்திரத்தை 10-01-2001ம் திகதி தொடக்கம் 18-01-2001 திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளுமாறும் சீல்வைத்த கேள்விகள் யாவும் 19-01-2001ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். அத்தருணம் தங்களையும் பிரசன்னமாகும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்
நல்லூர்பிரதேச சபை

பிரதி - உ. உ. ஆணையாளர் - தகவலுக்காக

| வேலை விபரம் | வைப்புப்பணம் | கேள்விப்பத்திர பணம் |
|---|---|---|
| 1) கொக்குவில் காங்கேசன்துறை வீதியில் உள்ள புதிய சந்தைக் கொட்டகை அமைத்தல்: (கி/1334) | 2500/- | 250/- |

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 11 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.